**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**25 டிசம்பர் 2015 / 13 ரபீவுல் அவ்வல் 1437**

# அமைதி மற்றும் அபிவிருத்திக்காகப் பங்காற்றுதல்

اَلْحَمْدُ لله الْمَلِكِ الْحَقِّ الْمُبِيْنِ الَّذِي أَبَانَ لِعِبَادِهِ مِنْ آيَاتِهِ مَا بِهِ عِبْرَةٌ لِلْمُعْتَبِرِيْنَ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ إِلَهَ الأَوَّلِيْنَ وَالآخِرِيْنَ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ الْمَبْعُوثُ رَحْمَةً لِلْعَالَمِيْنَ. اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيمًا كَثِيْرًا . أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள மரியாதைக்குரிய ஜமாஅத் தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது ”தக்வா” எனும் பக்தியை அதிகரித்துக் கொள்வோமாக! நம்மை அல்லாஹ்வின் பக்கம்

நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டுமென்ற நமது தீர்மானத்தை பசுமையாக்கிக் கொள்வோமாக!

ஜமாஅத்தார்களே!

மனிதர்களாகிய நாம் அடிக்கடி மறந்து விடுபவர்களாக உள்ளோம். எனவே, தவறுகள் மற்றும் பாவங்கள் புரிவதிலிருந்து நாம் தப்பித்து விட முடியாது. எனினும், நாம் எவ்வளவு தான் பாவங்களைச் செய்திருந்த போதிலும், சிறந்த முஃமின்களாக (ஓரிறை நம்பிக்கையாளர்களாக) ஆக வேண்டும்; அல்லாஹ்வுக்கு உச்சகட்டமாக அடிபணிந்த அடியாராக ஆக வேண்டும்; எந்த இறைத்தூதரின் சமுதாயத்தினராக ஆகுவது பெருமைக்குரிய விஷயமாகக் கருதப்படுகிறதோ அந்த இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் சமுதாயத்தினராக ஆக வேண்டுமென்றும், இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் எவர்களைத் தனது சமுதாய மக்கள் என நினைத்துப் பெருமை கொள்வார்களோ அவர்களில் ஒருவராக நாம் ஆக வேண்டுமென்றும் நம்மில் ஒவ்வொருவரும் விரும்புபவர்களாக உள்ளோம். நம்மைச் சிறந்த முஸ்லிம்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காக மேற்கண்ட நமது சிறந்த எண்ணங்களை, விருப்பங்களை நம்மில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எனினும், நாம் சிறந்த முஸ்லிம்கள் என எப்போது கருதப்படுவோம்? சிறந்த முஸ்லிம் என்றால் என்ன பொருள்? யார் சிறந்த முஸ்லிம்? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். நிச்சயமாக, ஒரு சிறந்த முஸ்லிம் என்பவர் அல்லாஹ்வுக்கு நிறைவேற்ற வேண்டிய வணக்க வழிபாட்டுச் செயல்களைப் புறக்கணிப்பவராக இருக்க மாட்டார். அவர் தன்னைப் படைத்தவனுடனானத் தொடர்பைத் தொடர்ந்து பாதுகாப்பவராக இருப்பார். மற்றவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும் போது இவர்

அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிபவராக இருப்பார். எச்செயல்கள் அல்லாஹ்வைப் புறக்கணிக்கத் தூண்டுமோ அச்செயல்களில் மற்றவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, இவர், அல்லாஹ் தனக்கு வழங்கிய நேரத்தையும் ஆண்டுகளையும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் செயல்களில் செலவழிப்பவராக இருப்பார். எனினும், நம்மைச் சிறந்த முஸ்லிம்களாக ஆக்குவதற்கு இவை மட்டும் போதுமாகுமா? எனவும் நாம் சிந்திக்க வேண்டும்.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் அருளிய பின்வரும் பொன்மொழியில் நாம் சிந்தனை செய்வோமாக! :

ஒரு ஓரிறை நம்பிக்கையாளர் (முஃமின்) நட்பும் நேசமும் மிக்கவராக இருப்பார். எவர் மற்றவர்களிடம் நட்பு கொண்டு அவர்களை நேசிக்கவில்லையோ அவருக்கு எவ்வித மரியாதையும் கிடையாது. மேலும், மனிதர்களில் சிறந்தவர் மற்றவர்களுக்கு அதிகப் பயனுள்ளவராக இருப்பவரே ஆவார். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் தப்ரானீ ரஹ், இமாம் தாரகுத்னீ ரஹ்)

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட ஹதீதில் காணப்படும் தன்மைகள் நம்மிடம் காணப்பட்டால் தான், நமது மார்க்கம் நம்மிடம் பரிபூரணமானதாக அமையும். நமது மார்க்கம், வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாகும். முஸ்லிம்கள் அல்லாஹ்வை வணங்க வேண்டும்; "அக்லாக்" எனும் நன்னடத்தைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மட்டும் போதிக்கப்படவில்லை. அவர்கள் தம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குக் கிருபை

காட்டி, அவர்களுக்குப் பயனுள்ளவர்களாக அமைய வேண்டுமெனவும் போதிக்கப்பட்டுள்ளார்கள்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அத்-தவ்பா" எனும் அத்தியாயத்தின் 71-வது வசனத்தில் கூறும் பின்வரும் கருத்துக்களில் நாம் கவனம் செலுத்துவோமாக! அவ்வசனத்தில், வணக்க வழிபாட்டுச் செயல்களுக்கு முன்பாக "அம்ரு பில் மஃரூஃப்" ( நன்மைகள் செய்யுமாறு மற்றவர்களுக்கு அழைப்பு விடுப்பது) என்பதையும், "நஹி அனில் முன்கர்" (தவறுகள் செய்வதை விட்டும் மற்றவர்களைத் தடுத்தல்) என்பதையும் அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

وَٱلۡمُؤۡمِنُونَ وَٱلۡمُؤۡمِنَٰتُ بَعۡضُهُمۡ أَوۡلِيَآءُ بَعۡضٖۚ يَأۡمُرُونَ
بِٱلۡمَعۡرُوفِ وَيَنۡهَوۡنَ عَنِ ٱلۡمُنكَرِ وَيُقِيمُونَ ٱلصَّلَوٰةَ
وَيُؤۡتُونَ ٱلزَّكَوٰةَ وَيُطِيعُونَ ٱللَّهَ وَرَسُولَهُۥٓۚ أُوْلَٰٓئِكَ سَيَرۡحَمُهُمُ
ٱللَّهُۗ إِنَّ ٱللَّهَ عَزِيزٌ حَكِيمٞ ٧١

பொருள்: இறைநம்பிக்கை கொண்ட ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாளர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் நன்மை புரியுமாறு ஏவுகிறார்கள்; தீமையிலிருந்து தடுக்கிறார்கள். மேலும், தொழுகையை நிலைநாட்டுகிறார்கள்; ஜகாத்தும் கொடுக்கிறார்கள். மேலும், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிகிறார்கள். அத்தகையோர் மீதுதான் அல்லாஹ் தனது கருணையைப் பொழிகின்றான்! திண்ணமாக, அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனாகவும், நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான்.

மேற்கண்ட வசனத்தின் மூலம், நாம் வணக்க வழிபாட்டுச் செயல்களை மட்டும் புரியுமாறு கட்டளையிடப்படவில்லை என்பது புலனாகிறது. உண்மையில், நாம் தீமைகளை, மற்றவர்களுக்கு நோவினை தரும் செயல்களைச் செய்யக் கூடாது என்பதுடன், தீமையான காரியங்களைச் செய்வதிலிருந்து மற்றவர்களைத் தடுக்குமாறும் நாம் கட்டளையிடப் பட்டுள்ளோம். மேலும், ஒரு முஃமினிடம் ”அக்லாக்” எனப்படும் நன்னடத்தைகள் மட்டும் காணப்பட்டால் போதுமாகாது, அவர் தன்னைச் சுற்றியுள்ளவர்களின் நலன்களுக்காகவும் பங்காற்றுவது அவசியமாகும்.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் முஃமினுக்கு உதாரணமாக பின்வரும் மிகச் சிறந்த கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்:

”ஒரு முஃமின் பேரீச்சை மரத்தைப் போன்றுள்ளார். அம்மரத்தின் எப்பகுதியை நீ எடுத்தாலும் உனக்குப் பயனுள்ளதாக இருக்கும்.” (ஹதீது நூல்: அத்தப்ரானீ)

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நாம், பல்வேறு இனம் மற்றும் மதத்தினர் வாழும் சிங்கப்பூர் போன்ற நாட்டின் முஸ்லிம்கள் எனும் ரீதியில், நமது பங்களிப்புகள் என்ன? நாம் எவ்வாறு பங்காற்ற முடியும்? என இங்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இச்சிறிய தீபகற்பத்தில், அனைத்து சிங்கப்பூர்வாசிகளுக்கும் அமைதி, அபிவிருத்தி மற்றும் வளத்தை உறுதி செய்வது முதற்கொண்டு முஸ்லிம்கள் எனும் ரீதியில் நாம் பல்வேறு வகையில் பங்காற்ற இயலும்.

திருக்குர்ஆன் அமைதியை வலியுறுத்திக் கூறுகின்றது. அமைதி எனும் பொருளைத் தரும் 789 வார்த்தைகளைத் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான். இதன் மூலம் அல்லாஹ் எந்தளவு அமைதிக்கும் அபிவிருத்திக்கும் முன்னுரிமை அளித்துள்ளான் என்பது புலனாகிறது.

இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) அவர்கள் மக்கா நகரத்துக்காக அல்லாஹ்விடம் எப்படி பின்வருமாறு பிரார்த்தனை செய்துள்ளார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்:

وَإِذْ قَالَ إِبْرَٰهِـۧمُ رَبِّ ٱجْعَلْ هَٰذَا بَلَدًا ءَامِنًا وَٱرْزُقْ أَهْلَهُۥ مِنَ ٱلثَّمَرَٰتِ مَنْ

ءَامَنَ مِنْهُم بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْءَاخِرِ ۖ

பொருள்: மேலும் இந்தச் சந்தர்ப்பத்தையும் நினைவுகூருவீராக! இப்ராஹீம் பிரார்த்தனை செய்தார்: “என் அதிபதியே! நீ இந்நகரத்தை அமைதி அளிக்கும் நகரமாக்கி வைப்பாயாக! இங்கு வசிப்பவர்களில் எவர்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புகிறார்களோ, அவர்களுக்கு, (அனைத்து விதமான) பழங்களையும் (உணவு வகைகளையும்) வழங்குவாயாக!” (அல்-குர்ஆன்: அத்தியாயம்: அல்-பகரா, வசனம்: 126)

ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட திருக்குர்ஆனின் துஆவிலுள்ள கருத்துக்களை நாம் ஆய்வு செய்தால், இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) அவர்கள், முதன்முதலாக, மக்கா நகரத்தின் அமைதிக்காக பிரார்த்தனை செய்துள்ளதைக் காணலாம்.

காரணம், எந்த நாடு அல்லது நகரமாக இருப்பினும் அவற்றில் மக்கள் வாழ்வதற்கு மிகவும் தேவையான அம்சம் அமைதியாகும்.

இன்று, உலகின் பல பகுதிகளில் வாழும் மக்களைப் பாதித்து வரும் கடுமையான சூழ்நிலைகள் மற்றும் பேரழிவுகளைப் பற்றி நாம் நன்கு அறிவோம் என உறுதியாக நம்புகிறேன். அவர்களின் நாடுகளில் அமைதி இல்லை. அவற்றில் போர்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன; எப்போது முடியும் என்பது புரியவில்லை. அவர்களின் சூழ்நிலைகள் எவ்வளவு கஷ்டமாக இருக்குமென்பதை சிந்தித்துப் பாருங்கள்! அவர்களின் நாடுகளில் இனி அமைதி ஏற்படவே வாய்ப்பில்லை; அங்கு அவர்களின் வாழ்வுக்கு உத்திரவாதமில்லை எனும் நிலை இருக்கும் போது அவர்கள் எவ்வளவு கொடூரமான நிலைகளை, வேதனைகளை எதிர்கொள்வார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். அந்நாடுகளில் நடைபெறும் போருக்கும், அவற்றில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கும் பல காரணங்கள் இருந்த போதிலும், முஸ்லிம்கள் எனத் தம்மைக் கருதிக் கொள்ளும் சில தனிநபர்களால் நிலைமை மேற்கொண்டு மோசமாகி யுள்ளது. அவர்கள் இஸ்லாத்திற்கு மாற்றமானச் செயல்களைச் செய்கிறார்கள். அச்செயல்கள் எவ்வகையிலும் இஸ்லாமியப் போதனை களைப் பிரதிபலிப்பதாக இல்லை.

உண்மையில், இஸ்லாத்திற்கு மாற்றமாக நடைபெறும் இவ்விதமானச் செயல்களின் பாதிப்புகளை உலகின் மற்ற பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் உணர்கிறார்கள். மற்றவர்கள் முஸ்லிம்கள் மீது சந்தேகம் கொள்கிறார்கள். முஸ்லிம்களிடம் கடுமையாக நடந்து கொள்கிறார்கள். இதற்குக் காரணம், இஸ்லாமியப் போதனைகளுக்கும், தம்மை முஸ்லிம்கள் என வாதிடும் சில முஸ்லிம்களின் பொறுப்பற்ற

செயல்களுக்கும் மத்தியில் வித்தியாசப்படுத்திப் பார்க்கும் ஆற்றல் அவர்களிடம் இல்லை.

சிங்கப்பூரில் வாழும் நாம் அதிர்ஷ்டசாலிகளாக உள்ளோம்; இங்கு கவலை தரும் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. நாம் இந்நாட்டில் வசிக்கும் குடிமக்கள் எனும் ரீதியில், நமது நிலைமை கேள்விக்குறியானதாக ஆகுவதற்கோ அல்லது நமது அமைதி பாதிக்கப்படுவதையோ நம்மில் எவரும் விரும்பமாட்டார். நாம் இந்நாட்டின் பிரஜைகள் எனும் ரீதியில், நமது அன்றாடச் செயல்களை அமைதியாக நிறைவேற்றும் உரிமைகளைப் பெற்றுள்ளோம். அதே சமயம், நாட்டின் அபிவிருத்திக்கும் வளத்திற்கும் பங்காற்றவும் கடமைப்பட்டுள்ளோம். ஒன்றுபட்ட சமுதாயமாக வாழ்ந்து வரும் நாம், எவ்விஷயங்கள் நமது அமைதிக்கும் அபிவிருத்திக்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக உள்ளனவோ அவற்றை எதிர்கொண்டு வெற்றிபெறுவதில் நாம் இணைந்து செயல்பட வேண்டும்.

ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட வசனத்தில், இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) செய்துள்ள துஆவில் மக்காவின் அபிவிருத்திக்காகவும், வளத்திற்காகவும் அல்லாஹ்விடம் அவர்கள் வேண்டியுள்ளார்கள். வளமும் செழிப்பும் அல்லாஹ்வின் அருட்கொடைகள் ஆகும். அவற்றை வழங்குமாறு அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வதும் அதற்காக நன்றி தெரிவிப்பதும் அவசியமாகும்.

இஸ்லாம், தன்னைப் பின்பற்றுபவர்களை பொருளாதார வெற்றிக்காக முயற்சிப்பதைத் தடுக்கவில்லை. எனினும், நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில், ஒவ்வொரு விஷயத்திலும் சமநிலையை உறுதி செய்யக்

கடமைப்பட்டுள்ளோம். இவ்வுலகின் வெற்றிக்காகவும் அபிவிருத்திக் காகவும் உழைக்கும் நாம், நமது இறுதி குறிக்கோளாகிய மறுமையின் வெற்றியை மறந்து விடக் கூடாது. மறுமைக்காக நாம் என்ன முதலீடு செய்துள்ளோம்? நாம் இவ்வுலகில் பல வீடுகள், கார்கள், எண்ணற்ற ஆடைகள், காலணிகள் மற்றும் பைகளைப் பெற்றிருக்கலாம்; ஆனால், மறுமையில் நமது நிலை எப்படி இருக்கும்? நமது குடும்பத்தார்கள் மறுமையில் எப்படி இருப்பார்கள் எனச் சிந்திக்க வேண்டும்.

சிங்கப்பூரில் அமைதியையும் அபிவிருத்தியையும் அனுபவித்து வரும் ஓரிறை நம்பிக்கையாளர்கள் எனும் ரீதியில், நமது மறுமையின் நலத்திற்கும் கடுமையாக உழைப்பதை நாம் மறந்து விடக் கூடாது. இந்த ஆண்டு முடிவுற்று, அடுத்த ஆண்டு வர இருக்கும் இக்காலையில் நம்மைப் பற்றிச் சிந்திப்பதற்கு சில மணி நேரங்களை நாம் ஒதுக்க வேண்டும்.

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

இப்பிரசங்கத்தின் இறுதியில், இதன் சுருக்கமாக, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு அமைதியையும் அபிவிருத்தியையும் வழங்கி அருள் புரிந்ததற்காக, அவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டுமென எனக்கும் உங்களுக்கும் நினைவுபடுத்திக் கொள்கிறேன். எனினும், அமைதியைப் பாதுகாப்பதற்காகவும், நாடு தொடர்ந்து வளமாக இருப்பதற்காகவும் நாம் முயற்சிக்காத வரை, உதவி செய்யாத வரை, நாம் இன்று அனுபவித்து வரும் அமைதியும் அபிவிருத்தியும் தொடர்ந்து இருக்கும் என்பதற்கு உத்திரவாதமில்லை.

நம் நாட்டைப் பாதுகாக்க அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! அபிவிருத்தியின் விசாலமான நோக்கத்தை அடைவதற்காக முயற்சிகள் செய்யும் ஆற்றலை அல்லாஹ் நமக்கு வழங்கி, அருள் புரிவானாக!

யா அல்லாஹ்! எங்கள் நாட்டின் அமைதியையும் வளத்தையும் பாதுகாப்பாயாக! மறுமை வாழ்க்கையின் மீதும், உன் மீதும், இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் மீதும் அன்பு கொள்ளும் பாக்கியத்தை எங்களுக்கு வழங்குவாயாக! மறுமையில் உனது திருப்தியைப் பெற்ற அடியார்களுடன் எங்களை எழுப்புவாயாக! யா ரஹ்மானே! மறுமையில் உனது பிரியத்திற்குரிய இறைத்தூதர்கள், அவர்களின் தோழர்கள் மற்றும் ஸாலிஹான ஆண், பெண்களுடன் இருக்கும் பாக்கியத்தைத் தருவாயாக! யா அல்லாஹ்! எங்களது பாசத்திற்குரிய ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களைச் சந்திக்கும் பாக்கியத்தை எங்களுக்குத் தருவாயாக! இறைத்தூதர்(ஸல்) அவர்களை ஆர்வத்துடன் பின்பற்றும் சமுதாய மக்களாக எங்களை ஆக்குவாயாக! எங்களைக் கொண்டு நபி(ஸல்) பெருமை கொள்ளும் அளவுக்கு எங்களின் நிலையைச் சீராக அமைப்பாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الْآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.